සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

## மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 07 - 2023 (2024)
## Third Term Test - Grade 07 - 2023 (2024)

## புவியியல்

நேரம்: 2 மணி.

பெயர்:

### பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

* இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பிற்குள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

01. புவியின் மத்திய கோட்டு விட்டத்திற்கும் முனைவு விட்டத்திற்கும் இடையிலான வேறுபாடு .......................................... km களாகும்.
(34 , 43 , 27)

02. 0º நெடுங்கோடு ........................................ எனப்படும்.
(கிரீன் வீச் நெடுங்கோடு, சர்வதேச திகதிக்கோடு, மத்திய கோடு)

03. உலகில் மிகவும் சிறிய சமுத்திரம் ........................................ சமுத்திரம் ஆகும்.
(ஆட்டிக், அந்தாட்டிக், பசுபிக்)

04. வடகிழ் பருவக்காற்று மழை கிடைக்கப் பெறுவது ........................................ மாதங்களுக்கு இடையிலாகும்.
(மார்ச் ஏப்ரல், மே செப்டம்பர் , டிசம்பர் ஏப்ரல்)

05. 1 : 50 000 இட விளக்கப்படத்தில் 10cm ஆனது நிலத்தில் எத்தனை km ஐக் காட்டுகிறது ..........................................
(5, 10, 20)

- விளக்கம் 6 - 10 வரை உள்ள வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் அடையாளம் இடுக.

06. தேசப்படம் ஒன்றின் பல்வேறு வகையான படங்கள் இலங்கை தேசப்பட புத்தகத் தொகுதியில் உள்ளகப்பட்டுள்ளன ( )

07. வளிமண்டல வெப்பம் அதிகரிப்பதன் காரணமாக மன அழுத்தம் உருவாகும் ( )

08. புவி நடுக்கத்தினால் ஏற்படும் பேரழிவிலிருந்து மீள்வதற்குப் போதுமான நேரம் உள்ளது. ( )

09. நெடுந்தீவு இலங்கைக்கு உரித்தான தீவுகளுல் ஒன்றாகும் ( )

10. தென்னாசிய நாடுகளுக்கு இடையே ஆயுள் எதிர்ப்பார்ப்பு எழுத்தறிவு என்பன அதிகம் கொண்ட நாடாக மாலைதீவு திகழ்கின்றது ( )

- 11 - 15 வரை பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக

11. மத்திய மலைநாட்டில் வடக்கில் உள்ள மலைத்தொடர் ........................................ மலைத்தொடர் ஆகும்

12. வளவை கங்கை ........................................ என்பன ஈர வலயத்தையும் உலர்வலயத்தையும் வேறுபடுத்தும் பௌதீக அம்சமாகும்.

13. இலங்கையில் உள்ள ....................................... காடானது இயற்கையான உலக மரபுரிமைகளில் ஒன்றாகும்.

14. சமுத்திர படுக்கையில் நிகழும் புவிநடுக்கம் நிலச்சரிவு எரிமலை வடிப்பு என்பன காரணமாக ......................................... ஏற்படும்.

15. இலங்கையில் கடல் மட்டத்திலிருந்து ......................................... மீட்டருக்கு மேற்பட்ட உயரமான பகுதி மலைநாட்டு நிலத்தோற்றத்திற்கு உரித்தானதாகும்.

- **இலக்கம் 16 - 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

16. இந்து சமுத்திரத்தில் இலங்கைக்கு அருகில் உள்ள தீவு எது?
    i. தஸ்மேனியா ii. ஐஸ்லாந்து iii. நிக்கோபார் iv. சிசிலி

17. இலங்கையில் உள்ளக சமவெளியில் அமைந்துள்ள தரைத் தோற்றப் பண்பைக் குறித்து நிற்பது
    i. களப்பு ii. முனை iii. கணவாய் iv. பாறைத்தொடர்

18. இலங்கையில் மத்திய மலைநாட்டில் உள்ள மேட்டு நிலங்களில் ஒன்று
    i. அப்புதலை ii. வெளிமடை iii. கடுகண்ணாவ iv. நமுனுகுல

19. இலங்கையின் ஊடாக செல்லும் நெடுங்கோடு பின்வருவனவற்றுள் எது?
    i. கிழக்கு நெடுங்கோடு 60 ii. மேற்கு நெடுங்கோடு 60
    iii. கிழக்கு நெடுங்கோடு 80 iv. மேற்கு நெடுங்கோடு 80

20. கண்டல் தாவரங்களின் பண்புகளில் ஒன்று
    i. குளிர்காலத்தில் இலை உதிர்தல்
    ii. சதைப்பற்றுள்ள இலைகளைக் கொண்டிருத்தல்
    iii. மூச்சு வேர்கள் காணப்படல்
    iv. நீண்ட வேர் தொகுதி காணப்படல்

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**


01. (அ) (i) படம் ஒன்றில் காட்டப்படும் குறியீட்டு விளக்கத்தின் பயன்பாடுகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) நாம் பயன்படுத்தும் இரண்டு வகையான வரைபடங்களின் பெயர்களை தருக. (2 புள்ளி)

(iii) படங்களை பிரதிபண்ணும் படிமுறைகள் மூன்று தருக. (3 புள்ளி)

(ஆ) (i) தென்னாசிய வலயப்படத்தில் A தொடக்கம் G வரையான ஆங்கில எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள நாடுகளை ஒழுங்காக எழுதுக. (7 புள்ளி)

(ii) தென்னாசிய நாடுகளின் எழுத்தறிவு வீதம் கூடிய இரண்டு நாடுகளை பெயரிடவும். (2 புள்ளி)




02. (அ) (i) இலங்கையின் தரைத்தோற்ற வலயங்கள் மூன்றினை பெயரிடுக. (3 புள்ளி)

(ii) மேலே நீர் குறிப்பிட்ட ஒவ்வொரு தரைத்தோற்ற வலயத்தினதும் தரைத்தோற்ற பண்புகள் இரண்டு வீதம் எழுதுக. (6 புள்ளி)

(iii) ஏதாவதொரு தரைதோற்ற வலயத்தின் முக்கியத்துவம் பெறும் பொருளாதார நடவடிக்கைகள் இரண்டினை பெயரிடுக.

(2 புள்ளி)

03. (i) தேசிய மரபுரிமை வகைகள் இரண்டினை பெயரிடுக. (2 புள்ளி)

(ii) கீழே தரப்பட்டுள்ள தேசிய மரபுரிமைகளை மனிதன் உருவாக்கியவை, இயற்கையாக உருவானது என வகைப்படுத்துக. (3 புள்ளி)
(சீகிரியா, சிங்க ராஜ வனம், வெப்ப நீரூற்றுக்கள், நீர்வீழ்ச்சிகள்)

(iii) அ (i) இலங்கையில் ஆதிவாசிகள் வாழும் பிரதேசங்கள் இரண்டினை பெயரிடுக. (2 புள்ளி)
(ii) ஆதிவாசிகளின் வாழ்வாரத்திற்கான வழிமுறைகள் இரண்டினை எழுதுக. (2 புள்ளி)

(iv) இலங்கையில் ஆதிவாசிகளிடம் காணக்கூடிய நவீன மக்களுக்கு இசைவான மாற்றங்கள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

04. (i) ஈர வலயத்தில் கடலுடன் கலக்கும் நதிகள் மூன்றினை பெயரிடுக. தருக. (3 புள்ளி)

(ii) ஈர வலய மக்கள் எதிர்கொள்ளும் இயற்கை அனர்த்தங்கள் இரண்டு தருக. (2 புள்ளி)

(iii) ஈர வலயத்தில் மக்கள் குழுமியுள்ளதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளி)

(iv) ஈர வலய மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் இரண்டு எழுதுக. (4 புள்ளி)

05. (i) இயற்கை இடர் என்றால் என்ன? (2 புள்ளி)

(ii) இயற்கை இடர்கள் அதிகரிப்பதற்கு காரணமான மனித செயற்பாடுகள் மூன்றை குறிப்பிடுக? (3 புள்ளி)

(iii) பின்வரும் மாவட்டங்களில் ஏற்படும் இயற்கை அர்த்தங்களை வகைப்படுத்துக. (3 புள்ளி)
(அனுராதபுரம், காலி, நுவரெலியா, அம்பாந்தோட்டை, பதுளை, களுத்துறை)
(வெள்ளம், வறட்சி, மண் சரிவு)

(iv) அனர்த்த முகாமைத்துவத்தின் அடிப்படை கூறுகள் மூன்றையும் பெயரிடுக. (3 புள்ளி)

06. (i) காலநிலை மாற்றம் என்றால் என்ன? (2 புள்ளி)

(ii) காலநிலை மாற்றம் நிகழ்வதற்கான காரணங்கள் 3 எழுதுக? (3 புள்ளி)


(iii) காலநிலை மாற்றத்தால் இலங்கையில் ஏற்படும் தாக்கங்கள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

(iv) காலநிலை மாற்றங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ள கூடிய நடவடிக்கைகள் மூன்று தருக. (3 புள்ளி)

07. (i) அருகில் தரப்பட்டுள்ள படத்தில் 1,2,3,4,5 என்று இலக்கமிடப்பட்டுள்ள மாவட்டங்களை ஒழுங்காக எழுதுக. (5 புள்ளி)

(ii) படத்தில் A, B, C என காட்டப்பட்ட தீவுகளை பெயரிடுக. (3 புள்ளி)

(iii) யாழ்ப்பாணக் குடா நாட்டின் மூன்று முக்கிய அம்சங்களை குறிப்பிடுக. (3 புள்ளி)




(4) WWW.PastPapers.WiKi (3)
Download Term Test Papers, Short Notes From One Place!

(4) WWW.PastPapers.WiKi (4)
Download Term Test Papers, Short Notes From One Place!

සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 07 - 2023 (2024)

Third Term Test - Grade 07 - 2023 (2024)

# புவியியல்

விடைப்பத்திரம்

## பகுதி I

1. 43
2. கறீன்விச் நெடுங்கோடு
3. ஆர்டிக்
4. டிசம்பர் பெப்ரவரி
5. 05
6. ✓
7. ✓
8. ×
9. ✓
10. ✓
11. நக்கில்ஸ்
12. தொதுறு ஓயா
13. சிங்கராஜா
14. சுனாமி
15. 300
16. நிக்கோபார்
17. பாறைத்தொடர்
18. வெலிமடை
19. கிழக்கு நெடுங்கோடு 80$^{o}$
20. 3 மூச்சு வேர்கள் காணப்படல்

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01. (அ) (i) படங்களை வாசிப்பதற்கு உதவும் படமொன்றில் அனைத்து தகவல்களையும் அறிய முடியும்

(ii) கருப்பொருள் படம், இடவிளக்கப்படும்

(iii) இலங்கை புறவுருவம் படம் ஒன்றை தெரிவு செய்தல்

தேச படத்தின் மீது ஊக்காட்டும் கடதாசியை அசையாது வைத்தபடி குண்டூசியினால் இணைத்தல்.

பின் இலங்கையின் கரையோர எல்லை வழியாக கோட்டினை வரைதல்

மெல்லிழை தாள்களை வேறொரு கடதாசியின் மீது வைத்து அவ்வெல்லை

வழியே மீண்டும் வரைதல்

(ஆ) (i) A - பாகிஸ்தான் B - இந்தியா C - நேபாளம்

D - பூட்டான் E - பங்களாதேஷ் F - இலங்கை

G - மாலைத்தீவு

(ii) மாலைதீவு, இலங்கை

02. (i) கரையோர சமவெளி, உள்ளக சமவெளி, மத்திய மலைநாடு

(ii) கரையோர சமவெளி - பரந்த சமவெளி குடா, கடனீரேரி, முனைதீவு

உள்ளக சமவெளி - சமவெளிகள், பாறை தொடர், எச்சக் குன்று

மத்திய மலைநாடு - மலைத்தொடர், மேட்டு நிலம், நீர்வீழ்ச்சி, கணவாய், பள்ளத்தாக்குகள்

(iii) கரையோர சமவெளி - மீன்பிடி கைத்தொழில், கருவாடு காயவைத்தல், சுற்றுலா கைத்தொழில்

உள்ளக சமவெளி - சுற்றுலா கைத்தொழில், விவசாயம்

மத்திய மலைநாடு - சுற்றுலா கைத்தொழில், விவசாயம்

03. (i) காணக்கூடிய மரபுரிமைகள், காண முடியாத மபுரிமைகள்

(ii) மனிதன் உருவாக்கியது இயற்கையாக உருவானவை சிகிரியா

சிங்கராஜா வனம்

குட்டம் பொய்கை வெப்ப நீரூற்றுக்கள்

நல்லூர் கோயில் நீர்வீழ்ச்சிகள்

(2) WWW.PastPapers.WiKi (1)



Download Term Test Papers, Short Notes From One Place!

iii) (அ) மகிங்கனை, தம்பான , ரென்னானிகல

(ஆ) பயிர்ச்செய்கை, வேட்டையாடுதல், காட்டு திரவியங்களை சேகரித்தல்

(iv) முறையான பாடசாலை கல்வியில் ஈடுபட்டு உயர்கல்வியில் பிரவேசித்தல்

இலத்திரன்கள் உபகரணங்களை பயன்படுத்தல்

04. (i) மகா ஓயா, களனி கங்கை, கழுகங்கை, பெந்தோட்டை கங்கை, வளவை கங்கை

ii) வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு

(iii) தொழில் வாய்ப்புகளை பெற

உட்கட்டமைப்பு வசதிக்காணப்படல்

சேவைகளை பெற்றுக் கொள்ள

(iv) நுளம்புகள் பெருக்கும், தரைகீழ் நீர் வற்றுதல், வாகன நெரிசல், சூழல் மாசடைவு

05. (i) இயற்கையாக அல்லது மனித செயற்பாடுகள் காரணமாக மக்களுக்கு அல்லது உடமைகளுக்கு சேதம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் இடங்கள் என அழைக்கப்படும்.

(ii) திட்டமிடலின்றிய கட்டட நிர்மாணங்களை வழிகாற்பாங்குகள் தடைபடல் காடழிப்பு

(iii) வெள்ளம் - காலி, களுத்துறை

வரட்சி - அநுராதபுரம், அம்பாந்தோட்டை

மண் சரிவு - பதுளை, நுவரெலியா

(iv) முன்னாயத்தம், அனர்த்த நிலைமையின் போது செயற்படுதல், அனர்த்தத்தின் பின்னரான நடவடிக்கைகள்

06. (i) பொதுவான காலநிலை பகுதிகளில் நீண்ட கால ரீதியாலும் குறுகிய கால ரீதியாலும் நிகழும் மாற்றங்கள் காலநிலை மாற்றங்கள் என அழைக்கப்படும்.

(ii) அளவுக்கு அதிகமான சுவட்டு எரிபொருள் எரிதல்,

காடழிப்பு, வளிமண்டலம் வெப்பமடைதல்

விவசாய கைத்தொழில் கழிவுகளை ஏறியூட்டல் எரிமலை வெடிப்புகள்

(iii) சமுத்திர நீர்மட்டம் உயர்தல்

அதிக மழை காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்தம்

வளிமண்டல வெப்பம் அதிகரிப்பதன் காரணமாக ஏற்படும் அழிவுகள்

வலுசக்தி வலுவாக்கம் உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள்

(iv) காடழிப்பினை குறைத்தல்

வளப்பகுதிகளை பாதுகாக்கப்பட்ட ஒதுக்கும் பகுதிகளாக பிரகடனம் செய்தல்

உயிர் வாழ்வின் பயன்பாட்டை அதிகரித்தல்

கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து போன்ற துறைகளில் மூலம் வெளிவிடப்படும் காபனீரொட்சைட்டு போன்ற தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அளவினை குறைத்தல்

07. (i) 1. யாழ்ப்பாணம் 2. கிளிநொச்சி

3. முல்லை தீவு 4. வவுனியா

5. மன்னார்

(ii) A - ஊர்காவற்துறை

B - நெடுந்தீவு

C - தலைமன்னார்

(iii) சமவெளிகள், களப்புக்கள், தீவுகள், மணல் வெளிகள், வளமான சிவப்பு மண், சுண்ணாம்புக்கல், மண், தரைகீழ் நீர்

PAST PAPERS WIKI

(2) WWW.PastPapers.WiKi (2)



Download Term Test Papers, Short Notes From One Place!


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න